558

தமிழ்மகள் வெளியீடு எண் க.

# தமிழ் மகள் பாட்டு.



குடியாத்தம்

மு. சாமிநாதன் அவர்களால்

இயற்றப்பெற்று

சென்னை

...ன் அச்சுக்கூடத்தில்

...திப்பிக்கப்பட்டது.

[விலை அணு 1.

0-,1X
N30.
177712

உ

குமரவேள் துணை

# பாத காணிக்கை

எனது உடலுக்கும், உயிருக்கும், இவை தோற்றத்துக்குக் காரணமாயிருந்த எனது தாய், தந்தைக்கும், அவர்களின் மூதாதைகளுக்கும், எனது உடன் பிறந்த பெண்கள், ஆண்களுக்கும், எனது உயிரனைய நண்பர்களுக்கும், எனது காதல் தெய்வம் சுதந்தரலக்ஷ்மிக்கும், இப்படியே பாரதத்தில் உடல் வாய்க்கப்பெற்ற முப்பது கோடி அரசிகளுக்கும், அரசர்களுக்கும், நலம் நாடி நிற்கும் மற்றைய நாடுகளுக்கும், தனது (பாரத நாட்டின்) டகைவர்களுக்கும் உணவு, உணர்வு, உடை, உல்லாசம் மற்றும் பல்வித சுகபோகங்களும் கொடுத்து, என்றும் (தான் சிறைப்பட்டு துயர்ப்படுகிற காலத்தும்) ஆதார மாதாவாய் நிற்கும் உலக நாயகி பாரத மாதாவுக்கு இந்த (தமிழ் மகள் பாட்டு) புத்தகத்தை பாத காணிக்கையாகக் கொடுக்கிறேன்.

குடியாத்தம் மு. சாமிநாதன்.

# தமிழ் மகள் பாட்டு.



குடியாத்தம்

மு. சாமிநாதன் அவர்களால்

இயற்றப்பெற்று

சென்னை

கந்தன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.]

பதிப்புரிமை]

[விலை அணா 1.

உ

குமரவேள் துணை.

ஆண்மை எழுக! பெண்மை திகழ்க!

அன்னை பாரதி எண்ணம் ஈடேறுக!

# அணிந்துரை.

---

தமிழ் நாட்டு அரசிகளே! அரசர்களே!!

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பதை உணராது பாரத மக்கள், குறிப்பாக தமிழ் மக்கள் நமது நாட்டுக்கு ஒவ்வாத அந்நியக் கல்வி, அந்நிய உணவு, அந்நிய உடை, அந்நிய நடை, அந்நிய நாகரிகம், அந்நிய அடிமை வாழ்க்கை இவைகளை மேற்கொண்டு, ஆண்மக்கள் ஆண்மை யற்றும், பெண் மக்கள் பெண்மை யற்றும் வாழும் இத்துரதிர்ஷ்ட இருபதாம் நூற்றாண்டில், மேற்குறிப்பிட்ட குறைகளை நீக்கவேண்டி பி. ஸீ. ராய், ஆசிரியர் சாது வாஸ்வானி, சுவாமி சிரதானந்தா, திலகராஜன், மகாத்மா பகவான்தீன், சேட் ஜம்னாலால் பஜாஜ், மகாத்மா காந்தி, ஸர். ஜகதீசச் சந்த்ரபோஸ், ஜஸ்டிஸ் ரானடே, ராமேஸம் போன்ற தேச பக்தர்களும் அறிஞர்களும் முயன்று முயன்று உழைத்தும், போதிய பயன்பெற முடியாது வருந்த வேண்டியதாயுளது. அதிலும், தமிழ் நாட்டைப் பொருத்தமட்டும் முன்னேற்றமென்பது முயற்கொம்பென்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு முன்னேற்ற மடையவேண்டியதாயின், "தமிழனென்றும்," "தமிழ் மகளென்றும்" சொல்லிக் கொள்ளும் தமிழ் நாட்டிற் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகன், தமிழ் மகள் கையிலும், செந்தமிழ்த் தாயின் செல்வப் புதல்வர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாருடைய திருத் தொண்டால் வெளிவந்துள்ள அருமை இயற்றமிழ்ப் புத்த கங்களும், (வாசகப் புத்தகங்களும்) தமிழ் இளைஞர் உள் ளக் கோயிலில் வீற்றிருக்கும் தேசியக்கவி, சி. சுப்ரமண்ய பாரதியாரின் இயற்றமிழ், இசைத்தமிழ்ப் புத்தகங்களும் தவறாமல் ஏறி இருக்கும் காலம் வந்தாலொழிய, தமிழ் நாட் டில் முன்னேற்றம் உண்டாகுமென்பதையோ காணமுடியு மென்பதையோ யாரும் உறுதியிட்டுச் சொல்வதற்கில்லை.

ஆனால், மேற்சொன்னவர்களின் அருமைப் புத்தகங் களின் விலைகள் சிறிது அதிகமாயிருப்பதால், என் போன்ற ஏழைத் தமிழ் மகனுக்கும், தமிழ் மகளுக்கும், எல்லாப் புத்தகங்களையும் பணமீந்து வாங்கிப் படித்துய்ய முடியாம லிருக்கிறதென்பதைத் தமிழ் மக்களுக்கு அறிவிக்கும் முக மாயும், ஏழைத் தமிழ் மக்களின் நன்மையைக் கோரியும், என் சிற்றறிவிற்கு (சிவக்கொழுந்தாய் நிற்கும் குமாரவேள் திருவருளால்) இயன்றமட்டும் முயன்று மேலிருவர்களு டைய நூல்கள் (புத்தகங்கள்) அனைத்தினுடைய சாரங் களைத் திரட்டி, தமிழ் நாட்டுச் சிறியோரும் பெரியோரும் பாடித் தெளிந்து, நடந்து, களிக்கும் வண்ணம் செந்தமிழ்ப் பாக்களாக இயற்றி, "தமிழ் மகள் பாட்டு" என்று பெய ரிட்டு இதை (இச்சிறு தமிழ் நூலை (புத்தகத்தை)த்) தங்கள் அழகிய-மெல்லிய கரத்தில்—அன்போடணைக்கும் அருந்தமிழ்க் கரத்தில்—இன்பமளிக்கும் இளம்பூங் கரத்தில்— பஞ்சோடுற வாடும் பைம்பொற் கரத்தில்;—செங்கோலேந் தும் செவ்விய கரத்தில்—குன்றுதளிக்கும் கொடைக்கரத்

தில் கொடுத்துளேன். இத் "தமிழ் மகள் பாட்டு" ஒரே இசையிலிருக்கிறதென்றோ நவையுடையதென்றோ தள்ளாது கொள்ளுவர் அறிஞரென்று நம்புகிறேன்.

இதில், நாட்டு (சித்த-ஆயுர்வேத) வைத்தியம், மாக்கறி யுணவு, தாய் நாட்டு உடை, நாட்டுக் கைத்தொழில், தாய்மொழிப் (தமிழ் மொழிப்)பற்று, தேசியக் கல்வி, தேசத்தொண்டு, சுயாட்சியின் மாண்பு, சுயாட்சியின்மையின் தீம்பு, ஒற்றுமை, குற்றங்குறை கூறுமை, ஒழுக்கம், உறுதி, பிறப்பெண்ணைத் தாயாக நினைப்பதால் வரும் மாண்பு, அகிம்ஸையின் சக்தி ஆய இவைபோன்ற நாட்டு முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் உறு துணையான தமிழ் வாசகங்கள் அமைந்திருப்பதாலும், இசையும் பாடுபவருக்கும் கேட்பவருக்கும் இனிமையும் நன்மையும் பயப்பதாயிருப்பதாலும், விலையும் மிகக் குறைவா இருப்பதாலும் தமிழ் நாட்டிலும், மற்ற வேறு நாடுகள் பலவற்றிலுமுள்ள ஒவ்வொரு தமிழ் மகளும், தமிழ் மகனும் இப்புத்தகத்தை வாங்கி மனப்பாடம் செய்து பாடி இன்புற்று, அன்பும் அறிவும் வாய்க்கப்பெற்று, தேசபக்தப் பெண்மணிகளாயும், தேசபக்த சிகாமணிகளாயுமிருந்து, தொண்டாற்றி, தாய் நாட்டை மீட்டு, சுதந்தா ஆட்சி நடாத்தி இதம்பெற வேண்டுமாய் தங்கள் துணைத்தாள்களில் முறையமிட்டுக் கொள்ளுகிறேன். எனது முறையம் ஈடேறுமென்று நம்பிக்கை கொண்டுள்ள

தங்கள் உண்மையுள்ள

குடியாத்தம் மு. சாமிநாதன்.

சென்னை
இராயபுரம்
29-8-30

குமரவேள் துணை.

# பாரத மாதா வணக்கம்.

"எந்தையுந்தாயும் மகிழ்ந்துகுலாவி இருந்தது மிந்நாடே" எ.இ.பா.

இராகம்—தன்யாசி.

## கண்ணிகள்.

(க) அன்னமும் பாலுநல் லாடையு மீந்திடும்
ஆயி! வணங்குகிறோம்*—மெய்
யறிவு தருங்கலை நூல்க ளளித்திடும்
அம்மே வணங்குகிறோம்—ஜய
மன்னர்கள் வீரர்கள் மாண்புள மாதர்கள்
மாசில மனமுடை யோர்—தூய
மாதவ யோகிகள் ஞானிகள் போற்றிடும்
மலரடி வணங்குகிறோம்—இளம்
புன்னகை! யோடெழுந் தின்னருள் கூர்ந்துமெம்
புன்மை கெடுப்பவளே!—நின்
பொன்னடி நீழலில் வாழ்ந்து பணிசெயப்
போற்றி வணங்குகிறோம்—இங்கு

* ஒருவராய்த் தனியாய் பாடும்போது இப்பாட்டுக்களில் "வணங்குகிறோம்" என்று வருகிற ஒவ்வொரு இடத்திலும் "வணங்குகிறேன்" என்று மாற்றி பாடிக்கொள்ளலாம்.

தன்னே ரிலாப்புகழ் வீசும்சீர்ப் பாரத
தாயே! வணங்குகிறோம்—நறுந்
தண்டமிழ் மாணிக்கத் தாமமணிந்துநின்
தாளை வணங்குகிறோம். (அன்னமும்)

(உ) உணவொடு வுடையுணர்வது மிகப் பெறதினம்
உன்னியிங் கோடிவரும்—எந்த
உலகினரும்முடி வணங்குமுன் திருவடி
உள்ள மகிழ்ந்தருள்வாய்—நல்ல
மணநிறை மதுவுறை மலர்வனஞ் சூழ்ந்திட
வளம்பொழி பாரதியே—சீர்
மங்கலமாநவ மணிகள் கொழித்திடும்
மலைகளின் நாயகியே—சற்
குணநிதியே மதியே அன்னையே யென்றும்
குன்ற மணிவிளக்கே—நின்
குரைகழலடிகளை வணங்கிநின்றோ மெங்கள்
குறைகள் களைந்தெறிவாய்—மனம்
இணங்கி நன்னினைவுகள் யாவுமீடேறிட
எழுந்தெமை யாளிறைவி!—புகழ்
இனிமை யெனுந்தமிழ் மாலைபுனைந்துன
திணையடி வணங்குகிறோம். (அன்னமும்)

———

உ

குமாரவேள் துணை.

அறம் வளர்க. மறம் மடிக.

# தமிழ் மகள் பாட்டு.

## சித்தி விநாயகர் தோத்திரம்.

"மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்கு" என்னும் இசையில் பாடுக.

இராகம்-காப்பி.] [தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

(க) சித்தி விநாயகர்
செந்தாமரைப் பாதம்
நத்தாதா ரேதுக்கடி?
தமிழ் மகளே!
நத்தாதா ரேதுக்கடி?

(உ) வித்தக ராஜன் சொல்
விக்கின ராஜனை
சித்தத்தில் தோன்றச் செய்வாய்
தமிழ் மகளே!
சித்தத்தில் தோன்றச் செய்வாய்

## கலைமாதா (ஸரஸ்வதி) தோத்திரம்.

(ங) சிங்கார தேவிநீ
செல்வத் திருமகள்நீ

அங்கலை வாணிநீயே
தமிழ் மகளே!
அங்கலை வாணிநீயே

(ச) மங்கல நாயகி
மாதாநின் தாள் துணை
இங்கெனக் கீய்வாய் தமிழ்
தமிழ் மகளே!
இங்கெனக் கீய்வாய் தமிழ்

## குருநாதன் தோத்திரம்.

(ரு) ஞான சிகாமணி
நற்றமிழ் மாணிக்கம்
தீனரக்ஷக குகன்
தமிழ் மகளே!
தீனரக்ஷக குகன்

(சு) கானமயில் வீரன்
கலைமா முனிகுருவை
நாடை திருவருள்தா
தமிழ் மகளே!
நாடை திருவருள்தா

## நூல்:

(எ) தேசமுன் னேற்றம்நாடி
செந்தமி ழாலேபாடி
பேசநீ நன்மை செய்வாய்
தமிழ் மகளே!
பேசநீ நன்மை செய்வாய்

(அ) மோசக் கருத்துக்களும்
மூடப் பழக்கங்களும்
நாசமடைவ தெப்போ ?
தமிழ் மகளே!
நாசமடைவ தெப்போ ?

(௯) நாரதர் போன்றென்றும்
நலத்திற்கிடை யூறுற்றும்
சோரர்கள் வீழ்வதெப்போ?
தமிழ் மகளே!
சோரர்கள் வீழ்வதெப்போ?

(௧௦) பாரத தேசத்தின்
பாலன்னம் உண்டிருந்தும்
சோரர்போல் மறைவதேனோ?
தமிழ் மகளே!
சோரர்போல் மறைவதேனோ?

(௧௧) தஞ்ச மடைந்தோரை
தற்காக்கும் பாரதம்
பஞ்சத்தால் நைவதேனோ?
தமிழ் மகளே!
பஞ்சத்தால் நைவதேனோ?

(௧௨) வஞ்சம், பொய், சூதாட்ட
வலையில் விழுந்தோர்க்கு
நெஞ்சந் தெளிவேதடி?
தமிழ் மகளே!
நெஞ்சந் தெளிவேதடி?

(௧௩) சித்தந் தெளிவின்றி
சிவசிவ வென்பதாலே
உத்தம ராவதுண்டோ?
தமிழ் மகளே!
உத்தம ராவதுண்டோ?

(௧௪) தத்துவ வாழ்வின்றி
தன்னிச்சை யாய்நடப்போர்
உத்தம ராவதுண்டோ?
தமிழ் மகளே!
உத்தம ராவதுண்டோ?

(கரு) அந்தோ! எமது முன்னோர்
ஆய்ந்தோய்ந்து கண்டதை
இந்தநாள் காணேமம்மா
தமிழ் மகளே!
இந்தநாள் காணேமம்மா

(கசு) வந்தேமா தரமென்று
வாயாரச் சொல்வதன்றி
சிந்தனை செய்வதுண்டோ?
தமிழ் மகளே!
சிந்தனை செய்வதுண்டோ?

(கஎ) கள்ளங் கபடற்ற
உள்ள முடையோரை
எள்ளுதல் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
எள்ளுதல் ஏதுக்கடி ?

(கஅ) பள்ளர் பறையரென்று
பாரதப் புத்திரரை
தள்ளுதல் முறையோ? சொல்வாய்
தமிழ் மகளே!
தள்ளுதல் முறையோ? சொல்வாய்

(கக) நித்திய வாழ்க்கையில்
நேர்மையில் லாதோர்க்கு
புத்தகம் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
புத்தகம் ஏதுக்கடி ?

(உ0) சத்திய வாழ்க்கையின்
சக்தியறிக் தோர்க்கு
அஸ்திரம் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
அஸ்திரம் ஏதுக்கடி ?

(உக) அன்பின் பலந்தன்னை
அநுபவத் தறிந்தோர்க்கு
துன்பந்தான் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
துன்பந்தான் ஏதுக்கடி ?

(உஉ) இன்பம் எளிதென்று
எண்ணித் தெளிந்தோர்கள்
துன்பத்தை நாடுவரோ ?
தமிழ் மகளே!
துன்பத்தை நாடுவரோ ?

(உங) சொந்த முயற்சியின்றி
சொல்லும்பீயே எம்யேயால்
சந்தன முண்டாகுமோ ?
தமிழ் மகளே!
சந்தன மூண்டாகுமோ ?

(உச) தந்திர மறியாமல்
தரணியில் வாழ்வோர்க்கு
தந்தானத் தன்னானா !
தமிழ் மகளே!
தந்தானத் தன்னானா !

(உரு) பெண்ணின்றி யமையாமை
ப்ரபஞ்சத் தாலறிந்தும்
புண்ணாவ தேதுக்கடி ?
தமிழ் மகளே!
புண்ணாவ தேதுக்கடி ?

(உசு) பெண்கல்வி, நாட்டுக்கல்வி
பேணாவிடில் " முன்னேற்றம் "
கண்ணெதிர் உண்டாகுமோ ?
தமிழ் மகளே!
கண்ணெதிர் உண்டாகுமோ ?

(உஎ) தன்மனை யல்லாளைத்
தாயென்று நினைப்போர்க்கு
பன்னூல்க ளேதுக்கடி ?
தமிழ் மகளே!
பன்னூல்க ளேதுக்கடி ?

(உஅ) புன்மொழி புகன்றிடும்
புத்தியில் பயின்றோர்க்கு
நன்மொழி வாய்ப்பதுண்டோ ?
தமிழ் மகளே!
நன்மொழி வாய்ப்பதுண்டோ !

(உகூ) மனமறிந்த ஒன்றை
மறையாதிருப் போர்க்கு
சினநாய்தான் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
சினநாய்தா னேதுக்கடி ?

(௩௦) தனமிருந் தாவதென்?
தயையில்லா மாந்தர்க்கு
தினவாழ்க்கை துன்பமன்றோ ?
தமிழ் மகளே!
தினவாழ்க்கை துன்பமன்றோ ?

(௩க) தன்தேச மக்கள்தினம்
தவிப்பதறிந் திருந்தும்
பொன்சேர்த்தல் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
பொன்சேர்த்தல் ஏதுக்கடி ?

(௩உ) பொன்விளையும் பாரத
பூமியில் நாமிருந்தும்
துன்புறல் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
துன்புறல் ஏதுக்கடி ?

(கூகூ) தேசம் அந்நியர்கையில்
சிக்கித் தவிக்கும்போது
வாசனை ஏதுக்கடி?
தமிழ் மகளே!
வாசனை ஏதுக்கடி?

(கூச) ஆசையற்றுப் பெண்களும்
ஆண்களோ டொத்துழைத்தால்
பேசுந்தீ தேதுக்கடி?
தமிழ் மகளே!
பேசுந்தீ தேதுக்கடி?

(கூரு) பல்வளமும் நமது
பாரதத் திலிருந்தும்
இல்லார்போல் ஏங்குவதேன்?
தமிழ் மகளே!
இல்லார்போல் ஏங்குவதேன்?

(கூசு) "நல்லோர்கள் பெருக்கத்தால்
நாடுசெழிக்கு" மென்ற
சொல்லை மறவாதேடி!
தமிழ் மகளே!
சொல்லை மறவாதேடி!

(கூஎ) குற்றங்குறை கூறி
குறும்புகள் செய்வோர்க்கு
பொற்றவி சுண்டாகுமோ?
தமிழ் மகளே!
பொற்றவி சுண்டாகுமோ?

(கூஅ) பெற்றதாய், நாட்டையும்
பேணுத மனிதர்க்கு
உற்றதுணை யேதடி?
தமிழ் மகளே!
உற்றதுணை யேதடி?

(௩௯) அயல்நாட்டுப் பொருள்கட்கு
அடிமைப்பட் டிருப்போர்க்கு
"சுயமதிப்" பேதுக்கடி ?
தமிழ் மகளே!
"சுயமதிப்" பேதுக்கடி ?

(௪௰) "சுயமரி யாதை"யென்று
சொல்லித் திரிவோர்க்கு
அயலாக்ஷி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
அயலாக்ஷி ஏதுக்கடி ?

(௪௧) அகங்கார நினைப்பாலே
ஆயாமற் பேசுவோர்க்கு
சுகவாழ்க்கை உண்டாகுமோ ?
தமிழ் மகளே!
சுகவாழ்க்கை உண்டாகுமோ ?

(௪௨) நகைமுக முயற்சியால்
நாட்டை ஜயிப்போர்க்கு
பகைமுகம் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
பகைமுகம் ஏதுக்கடி ?

(௪௩) கடமையைச் செய்யாமல்
காலங்கழிப் போர்க்கு
இடந்தந்த தேதுக்கடி ?
தமிழ் மகளே!
இடந்தந்த தேதுக்கடி ?

(௪௪) திடமுற்ற ஒற்றுமையின்
ஜெயசக்தி யறிந்தோர்க்கு
படைத்துணை ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
படைத்துணை ஏதுக்கடி ?

(சரு) மரக்கறி, காய்களின்
மாண்பை யுணர்ந்தோர்க்கு
*மறக்கறி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
மறக்கறி ஏதுக்கடி ?

(சகூ) சிரத்தையாய் தேசத்தொண்டு
செய்துஜெயங் காண்போர்க்கு
காகோஷம் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
காகோஷம் ஏதுக்கடி ?

(சஎ) மாலை, மரியாதை,
மங்கல வாத்தியங்கள்
வேலையாட் கேதுக்கடி ?
தமிழ் மகளே!
வேலையாட் கேதுக்கடி ?

(சஅ) காலையெழுந்த துந்தங்
கடமையைச் செய்வோர்க்கு
ஆலைக ளேதுக்கடி ?
தமிழ் மகளே!
ஆலைக ளேதுக்கடி ?

(சகூ) கைக்குத்து அரிசியின்
கண்ணியந் தெரிந்தோர்க்கு
†மெய்க்குத்து உணவேனடி ?
தமிழ் மகளே!
மெய்க்குத்து உணவேனடி ?

---

* கொலையால் வருகிற புலால், மீன், முட்டை.

† ஜீவசக்தியற்ற மில்லரிசி, மில்லிலரைக்கிற கோதுமை மா, முதலியவையால் செய்யப்படுகிற-உயிர்ச்சக்தியற்ற-உடலுக்கு எப்போதும் நோய் தருகிற தீய வுணவு.

(௫0) உய்க்கும் கலமறிந்து
உத்தம ரானவர்க்கு
பொய்க்கல மேதுக்கடி ?
தமிழ் மகளே!
பொய்க்கல மேதுக்கடி ?

(௫௧) இதமொழி புகன்றிங்கு
இனிதா யிருப்போர்க்கு
மதமொழி எதுக்கடி ?
தமிழ் மகளே!
மதமொழி எதுக்கடி ?

(௫௨) இதய மலர்மீது
இறைவனைக் காண்போர்க்கு
கதைகூத்து எதுக்கடி ?
தமிழ் மகளே!
கதைகூத்து எதுக்கடி ?

(௫௩) வீட்டினில் ராட்டினத்தில்
வினையாற்றும் பெண்களுக்கு
நாட்டியம் எதுக்கடி ?
தமிழ் மகளே!
நாட்டியம் எதுக்கடி ?

(௫௪) நாட்டின் குறையறிந்து
நயஞ்செய்யும் மாந்தருக்கு
பூட்டுதல் எதுக்கடி ?
தமிழ் மகளே!
பூட்டுதல் எதுக்கடி ?

(௫௫) கடவுள் கொடுத்தநல்
காக்ஷியைப் பேணுவோர்க்கு
மடலீலை எதுக்கடி ?
தமிழ் மகளே!
மடலீலை எதுக்கடி ?

(௫௬) இடருக்கிடர் விளக்கும்
இணையற்ற வீரர்கட்கு
உடல்வலி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
உடல்வலி ஏதுக்கடி ?

(௫௭) மனமொத்த தம்பதிகள்
வாழ்க்கை யறிந்தோர்க்கு
தினஞ்சண்டை ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
தினஞ்சண்டை ஏதுக்கடி ?

(௫௮) கனமுற்ற பெண்ணைக்கொண்டு
கற்றுத் தெளிவோர்க்கு
சினநேசம் ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
சினநேசம் ஏதுக்கடி ?

(௫௯) சுயஆட்சி முறைதன்னில்
சுகநிலை காண்போர்க்கு
அயலாட்சி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
அயலாட்சி ஏதுக்கடி ?

(௬௦) நயமொழி தமிழ்மொழி
நன்மை யறிந்தோர்க்கு
அயல்மொழி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
அயல்மொழி ஏதுக்கடி ?

(௬௧) சத்தியா க்ரகத்தின்
சக்தியறிந் தோர்க்கு
கத்திக ளேதுக்கடி ?
தமிழ் மகளே!
கத்திக ளேதுக்கடி ?

(௬௨) தித்திக்கும் மொழி, நடை
செம்பெண்ணை மணப்போர்க்கு
முத்திவே றேதுக்கடி ?
தமிழ் மகளே!
முத்திவே றேதுக்கடி ?

(௬௩) காய், கனிகள் தரும்
கட்டழ கறிந்தோர்க்கு
*நாய்வுண வேதுக்கடி ?
தமிழ் மகளே!
நாய்வுண வேதுக்கடி ?

(௬௪) வாய்மைநெறி பாரத
வளநெறி கண்டோர்க்கு
†பேய்நெறி ஏதுக்கடி ?
தமிழ் மகளே!
பேய்நெறி ஏதுக்கடி ?

(௬௫) சோம்பல் தனைநீக்கி
சுறுசுறுப்பா னோர்க்கு
நாம்சொல்வ தேதுக்கடி ?
தமிழ் மகளே!
நாம்சொல்வ தேதுக்கடி ?

(௬௬) தாம்பிறந்த தாய்நாட்டை
தாழ்வின்றி காப்போர்க்கு
நாம்சொல்வ தேதுக்கடி ?
தமிழ் மகளே!
நாம்சொல்வ தேதுக்கடி?

(௬௭) கடிகையும் வீணின்றி
கருத்தா யிருப்போர்க்கு
அடிமைதா னேதுக்கடி
தமிழ் மகளே!
அடிமைதா னேதுக்கடி ?

---

* சுகாதாரத்துக்கு நேர்விரோதமான மாமிச (புலால்) உணவு.
† சைவ நெறிக்கு நேர்மாறான நெறிகள்.

(சுஅ) பிடியானை யுந்தந்து
பெரும்பட்ட மீந்தாலும்
அடிமைப்பே யேதுக்கடி!
தமிழ் மகளே!
அடிமைப்பே யேதுக்கடி?

(சுகூ) தெள்ளிய தமிழ்ரசம்
தினமுண் டிருப்போர்க்கு
கள்குடி எதுக்கடி?
தமிழ் மகளே!
கள்குடி எதுக்கடி?

(எ0) கள்ள மில்லாத காந்தி
காட்டிய வழிசெல்லாப்
பிள்ளைக ளேதுக்கடி?
தமிழ் மகளே!
பிள்ளைக ளேதுக்கடி?

(எக) உரிமைக்கும், ஊருக்கும்,
உயிர்கட்கும் உழைக்காமல்
திரிமாந்த ரேதுக்கடி?
தமிழ் மகளே!
திரிமாந்த ரேதுக்கடி?

(எஉ) அரியசித்த வைத்திய
அருமை தெரிந்தோர்க்கு
*சிரிவைத்தியம் எதுக்கடி?
தமிழ் மகளே!
சிரிவைத்தியம் எதுக்கடி?

---

* தீராத பெரும் நோயைத் தீர்க்கும் மூலிகைகள், நம் நாட்டி லிருக்க அவைகளைப் பேணாது, அந்நிய நாட்டினர் மருந்தை மிஞ்சிய விலையீந்து உண்டு, குணமடையாது வருந்துவதைக் கண்டு அறிஞர் நகைக்கும்படி செய்துகொள்ளும் நமது நாட்டு இயற்கைக்கு மாறான வைத்தியம்.

177712

(எங) நாட்டினிற் பஞ்சிருக்க
ராட்டினம் கையிருக்க
தீட்டுத்துணி யேனடி?
தமிழ் மகளே!
தீட்டுத்துணி யேனடி?

(எச) திட்டின மரத்திற்கூர்
செம்மையாய்ப் பார்த்திடும்
நாட்டினர் உறவேனடி?
தமிழ் மகளே!
நாட்டினர் உறவேனடி?

(எரு) வளம்நல்க பாரதத்தாய்
மாதேவி யுள்ளபோது
உளம்நைதல் ஏதுக்கடி?
தமிழ் மகளே!
உளம்நைதல் ஏதுக்கடி?

(எசு) இளமை மணம்அழகு
இறைமையை நாடுவோர்க்கு
தளர்நடை ஏதுக்கடி?
தமிழ் மகளே!
தளர்நடை ஏதுக்கடி?

(எஎ) நாட்டில் விளைபொருளை
நாவாயி லேற்றிமீண்டும்
கேட்டுண்டால் சிரிப்பாரன்றோ?
தமிழ் மகளே!
கேட்டுண்டால் சிரிப்பாரன்றோ?

(எஅ) வீட்டுக்கு எஜமானன்
வேறொருத்த னென்றால்
கேட்டோர்கள் நகைப்பாரன்றோ?
தமிழ் மகளே!
கேட்டோர்கள் நகைப்பாரன்றோ?

ஓம் தத்ஸத்
முற்றியது.

# கதராடை.

"வனஜாக்ஷி" எ. இ. பாடுக.

பல்லவி

(க) கதராடை காந்திமகான் சொன்ன
கதராடை.

பல்லவி மகுடம்

(உ) கைராட்டினத்தினுல் நூற்ற நூலை நம்
நாட்டிலுள்ள தறியாலே செய்தநல்ல (கதரா)

அநுபல்லவிகள்

(ங) சதமெனகிளாஸ்கோ மல்லை நம்பாதீர்
சதிசெயு மான்செஷ்டர் சரக்கை வாங்காதீர்
பதந்தரும் ராட்டினம் கதரைவிடாதீர்
பட்டினி கிடக்கும் ஏழை
கஷ்டந்தீரும் உற்றுப்பாரும். (கதரா)

(ச) ஏழைகளுக்கிது நல்பிழைப்பாகும்
இழை நூற்பது உயரிய தொழிலாகும்
வாழிய இந்தியா வறுமையும் போகும்
வையம் போற்றும் ஐயனை
தூய்ய ஞான மூர்த்திகட்டும். (கதரா)

(ரு) ஆடம்பரமான வாழ்க்கை யைவிட்டு
அகிலம் புகழும் மகரிஷி வழி தொட்டு
பாடல் கமழுந் தமிழ்த் தாயைக்கும் பிட்டு
பாவையர்கள் நூற்ற நூலை
மேவிகைத்தறி துணியைக்கட்டுங்கள். (கதரா)